මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date. 19.06.2025

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் பிரதானிகள்,

**<u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தலுடன் தொடர்புடையதாகும்</u>**

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அனைத்து பிரதிவாதித் தரப்புக்களும் கடமைப்பட்டுள்ளனர். மேலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளை அமுல்படுத்தல் தொடர்பாக இலக்கம்: 17/2005 மற்றும் 2005.10.05 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை ஊடாக பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் பிரதானிகள் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 15 (7) பிரிவிற்கிணங்க பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் அந்தப் பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு குறித்த நபரால் எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு கருதுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு அறிக்கைப்படுத்துமாறு பணிப்புரை விடுக்கப்படல் வேண்டுமென்பதோடு, அதன் பிரகாரம் அந்த அனைவரும் ஆணைக்குழுவுக்கு அறிக்கைப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளனர் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும், ஆணைக்குழுவினால் பரிந்துரைகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்தாமை தொடர்பாக வினவும்போது அந்த விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அந்தப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லையென சில நிறுவனங்கள் மற்றும் / அல்லது உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேன்முறையீடு முன்வைக்கப்பட்டமையின் அடிப்படையில் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லையென்ற விடயத்தை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும் பரிந்துரைகள் தொடர்பாக மீண்டும் மேன்முறையீடு செய்யும் முறையொன்று இல்லாமையினால் மேன்முறையீடுகளை முன்வைத்து பரிந்துரைகளை அமுல்படுத்தாமல் இருப்பதற்கு சட்ட ரீதியிலான வாய்ப்புக்கள் இல்லையென அனைத்துத் தரப்புக்களும் அறிந்திருத்தல் வேண்டுமென்ற விடயத்தை வலியுறுத்துகின்றேன்.

ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளை அமுல்படுத்தாவிட்டால் அதற்கெதிராக ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டியேற்படுமென அனைத்துத் தரப்புக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

அதற்கிணங்க இந்த விடயம் தொடர்பாக தங்களுக்கு கீழ் நிலவுகின்ற நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களை உள்ளக சுற்றறிக்கைகள் ஊடாக அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பாக 2025.06.30 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமான அறிக்கையொன்றை இந்த ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அறியத் தருகின்றேன்.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

**தவிசாளர்,**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

ප්‍රධාන කාර්යාලය / தலைமைக் காரியாலயம் / Head Office: 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு -04. / 14, R.A.De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94-11- 2505580/81/82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2505541/74
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 011-2505575 1996
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: sechrcsl@gmail.com
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 17/2005

எனது இல: தா/1/1/2/4/1
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2005.10..05..

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்கள் மற்றும்,
நியதிச்சட்ட சபை தலைவர்கள்,

**<u>மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும் போது அரச நிறுவனங்களின் உதவி வழங்கல்</u>**

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளுள் பின்வரும் கடமைகளின் பால் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) அடிப்படை உரிமைகள் தொடர்பிலும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் அவற்றை அனுசரித்தல் என்பவற்றை ஊக்குவித்தல் தொடர்பிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்துறை செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் கண்காணித்தல்.

(ஆ) அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப்பாடுகளைவிட்டு விசாரணை செய்தலும் புலனாய்வு செய்தலும் அத்துடன் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க மத்தியஸ்தம் மூலமும் இணக்கத்தின் மூலமும் அவற்றை தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும்.

(இ) அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லுவதிலும், ஊக்குவிப்பதிலும், பாதுகாப்பதிலும் சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும் நடவடிக்கை முறைகளையும் தொகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்படி பணிகளை நடைமுறைப்படுத்தும் போது தங்களின் நிறுவனத்திற்கு உரிய செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் போது அந்தக் குழுவிற்கு பொறுப்புடன் விடயங்களை சமர்ப்பிக்குமாறும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஆணைக்குழு செய்கின்ற பரிந்துரைகள் தங்களுக்கு கிடைத்ததும் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரிகளின் முறைசார் அங்கீகாரத்தை பெற்ற பின் நடை முறைப்படுத்துவதற்காக வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டி.திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு

Mtanu R.9